# ஞானஸ்நானம்

**மத் 28 : 19-20**

ஆகையால் நீங்கள் புறப்பட்டு போய், சகல ஜாதிகளையும் சீஷராக்கி பிதா, குமாரன், பரிசுத்த ஆவியின் நாமத்திலே அவர்களுக்கு ஞானஸ் நானம் கொடுத்து நான் உங்களுக்கு கட்டளையிட்ட யாவையும் அவர்கள் கை கொள்ளும்படி அவர்களுக்கு உபதேசம் பன்னுங்கள் இதோ உலகத்தின் முடிவு பரியந்தம் சகல நாட்களிலும் நான் உங்களுடனே கூட இருக்கின்றேன் என்றார் ஆமென்.

எல்லோரும் பாவிகள் - எல்லோருக்கும் விசுவாசம் தேவை - நீண்ட நெடுங்காலத்திற்கு முன் இருளாகிய அந்திக் கிறிஸ்து ஐரொப்பிய கிறிஸ்துவர்களை ஏமாற்றிக் கொண்டிருந்தான். போப் என்ற அந்தி கிறிஸ்து வேதாகமத்தை மாற்றி உண்மையை மறைத்து மனித உபதேசத்தை வைத்தான் - கடவுள் சீர்த்திருத்தவாதிகளை எழும்பச் செய்து மறுபடியும் திரும்ப உண்மையான கடவுளுடைய வார்த்தைகளை மக்களுக்கு கொண்டு வந்தார்.

இந்த சீர்த்திருத்தவாதிகள் வேதாகமத்தை ஆராய்நது பார்த்தபோது கடவுள் அவர்களுக்கு உண்மையை வெளிப்படுத்தினார். ஏழு சாக்கிர மெந்துகள் இருக்கின்றன என்று போப் கற்பித்து வந்தான் - ஒரு சில புராட்டஸ்டென்ட்கள் ஏழு சாக்கிர மெந்துகளையும் நிராகரித்தனர் வேதாகப் புத்தகம் என்ன போதிக்கிறது என்பதை அவர்கள் கவனிக்கத் தவறிவிட்டார்கள். லூத்தரன் சீர்த்திருத்தவாதிகள் கவனமாக கடவுளுடைய வார்த்தையைப் படித்து இரண்டு சாக்கிர மெந்துகளை தெளிவாகப் பார்த்து கடவுளுடைய வார்த்தையை பயன்படுத்தி பூமிக்குறிய பொருட்களை சம்மந்தப்படுத்தி இந்த புனித செய்கையானது ஆண்டவராகிய இயேசு கிறிஸ்துவினால் ஸ்தாபிக்கப்பட்டது. அது பாவ மன்னிப்பை கொடுக்கிறது என்பதை கண்டு கொண்டனர். லூத்திரன் சீர்த்திருத்தவாதிகள் போப் மிதமிஞ்சி தேவனுடைய வார்த்தைகளுடன் சேர்த்தவைகளை தவிர்த்து, வேதாகமத்தை மானிட அறிவு ஆட்சி செய்வதிலிருந்து விடுவித்து வந்தனர். முக்கியமான இரண்டு சாக்கிரமெந்துகளில் ஞானஸ் நானம் ஒன்று.

## ஞானஸ்நானம் :-

### ஞானஸ்நானம் செய்யத்தக்கவை என்ன ?

மத்தேயு 28ம் அதிகாரத்தில் நம்முடைய தேவனுடைய மிகப் பெரிய பிரதானமான கட்டளை பதிவு செய்யப்பட்டுள்ளது. எல்லா ஜாதிகளையும் சீஷராக்குங்கள் என்று கடவுள் நமக்குச் சொல்லியிருக்கிறார்.

அவருடைய கட்டளைகளை பின்பற்றிச் சீஷராக்குங்கள் அவர் இரண்டு பெயரெச்சங்களை கிரேக்க மொழியில் பயன்படுத்தி இருக்கிறார். அந்த பெயரெச்சுகள் யாதெனில் ஞானஸ் நானம் உபதேசித்தல், (கற்பித்தல்) ஞானஸ் நானத்தின் மூலமும் உபதேசிப்பதன் மூலமும் நாம் எப்படி சீஷராக்க வேண்டும் என்று தேவன் நமக்குச் சொல்லுகிறார். ஆதி அப்போஸ்தல திருச்சபைகளில் இது செய்யப்பட்டு வந்தது என்று நாம் விசுவாசித்து நாம் அவைகளை வழக்கப்படுத்துகிறோம். வயது வந்தவர்களுக்கு (பெரியவர்களுக்கு) நாம் உபதேசித்து (கற்பித்து) ஞானஸ் நானம் தருகிறோம். சிறியவர்களுக்கு ஞானஸ் நானம் கொடுத்து கற்றுத் தருகிறோம். இரண்டு நிலையிலும் கடவுளுடைய வார்த்தை வல்லமையுடையதாயிருந்து சீஷராக்குகிறது.

பிதா, குமாரன் பரிசுத்த ஆவியானவருடைய நாமத்தில் திரித்துவதேவனை நாம் துதித்து பிரார்த்தித்து நாம் எப்போது குழந்தைகளுக்கு ஞானஸ் நானம் கொடுக்கிறோமோ அப்போழுதே பரிசுத்த ஆவியானவர் அவர்களுடைய இருதயத்தில் விசுவாசத்தை உருவாக்குவதினால் அவருடைய குடும்பத்திற்குள் நுழைய முடிகிறது.

வயது வந்தவர்களுக்கு (பெரியவர்களுக்கு) நாம் உபதேசித்து (கற்பித்து) பிறகு ஞானஸ் நானம் கொடுக்கிறோம் இது சகல வல்லமை பொருந்திய கடவுளுடைய வார்த்தையாகிய சுவிஷேசம் எப்படி வயது வந்தவர்கள், அதைபோலவே சிறிய குழந்தைகள் இருதயத்தில் விசுவாசத்தை உருவாக்குகிறது. எப்போது பெரியவர்கள் கிறிஸ்துவில் விசுவாசத்தை பகிரங்கமாக அறிக்கை செய்கிறார்களோ அப்போது நாம் அவர்களுக்கு ஞானஸ் நானம் கொடுக்கிறோம். அது விசுவாசத்தை பெலப்படுத்துகிறது, திடப்படுத்துகிறது. அதேப் போன்ற முறையில் பலிப்பீடத்திலும் அல்லது வார்த்தையில் சுவிஷேசமும் செயலாற்றுகிறது.

நாம் உபதேசித்து (அல்லது) கற்றுகொடுத்துவிட்டு ஞானஸ் நானம் கொடுக்கிறோம் ஏனென்றால் அவர்களால் பாஷையை புரிந்துக் கொள்ள முடியும்.

சிறிய குழந்தைகளுக்கு நாம் ஞானஸ்நானம் கொடுத்துவிட்டு பிறகு கற்றுக் கொடுக்கிறோம். அப்பொழுதிலிருந்து அவர்களால் மொழியை புரிந்து கொள்ள முடியாது. அவர்கள் நாவினால் விசுவாசத்தை அறிக்கை செய்ய முடியாது. கடவுளுடைய வல்லமையுள்ள வார்த்தையானது விசுவாசத்தை தங்களுடைய குழதைகளுடைய இருதயத்தில் உண்டாக்கும் என்ற நம்பிக்கையில் தங்கள் குழந்தைகளை கிறிஸ்துவ பெற்றோர்கள் ஞானஸ் நானம் கொடுக்க கொண்டு வருகிறார்கள். ஒரு குழந்தை ஒரு வேலை அவளுடைய அல்லது அவனுடைய ஞானஸ் நானத்தை துரிதமாக தள்ளிவிடலாம். ஆனால் பெற்றோர்கள் தங்களுடைய பிள்ளைகளை கண்டித்து கர்த்தருக்கேற்ற சிட்ஷையில் போதித்து வளர்க்க வேண்டியது அவர்களுடைய தலையாய கடமையாயிருக்கிறது.

எபேசி 6:4 பிதாக்களே நீங்களும் உங்கள் பிள்ளைகளை கோபப்படுத்தாமல் கர்த்தருக்கேற்ற சிட்ஷையிலும், போதனையிலும் அவர்களை வளர்ப்பீர்களாக.

## ஞானஸ் நானம் யாரை உத்தேசித்திருக்கிறது [அல்லது] திட்டமிட்டிருக்கிறது ?

அப்போஸ்தலர் உபதேசித்த அதே உபதேசம் நம்முடைய உபதேசமாயிருக்கின்றது. இயற்கையாகவே நாமும் அப்போஸ்தல உபதேசத்தையே நாடி ஞானஸ் நானமானது யாரை உத்தேசித்திருக்கிறது என்று விவரிக்கிறோம். முதன் முதலாக நாம் பார்க்கிறோம் மத் 28 ஆம் அதிகாரத்தில் பிரதான மிகப் பெரிய கட்டளை பதிவு செய்யப்பட்டுள்ளது அந்த கட்டளை யாதெனில் எல்லா ஜாதிகளுக்கும் ஞானஸ் நானம் கொடுக்க வேண்டும் அல்லது ஞானஸ் நானம் செய்விக்கப்பட வேண்டும் இது எல்லாவற்றையும் தன்னுள் அடக்கியிருக்கிற ஒரு எல்லையாகும். அந்த சிறிய குழந்தைகளுக்கு ஞானஸ் நானம்.

கொடுக்கக் கூடாதென்று எந்த ஒரு சிறிய அளவும் வேதாகமத்தில் சொல்லப்படவில்லை. ஆகவே சிறிய குழந்தைகளை சகல ஜாதிகளையும் என்ற அந்த எல்லையிலிருந்து நாம் அவர்களை தனியாக பிரிக்கக் கூடாது.

எதில் சொல்லும் ஒரு வயது விளக்கமுள்ள அறிவுடைமையுள்ள ஒரு வயது எது தேவை என்பது அது ஒரு மனிதனுடைய தனிப்பட்ட விளக்கமாயிருக்கிறது. பதிலாக வாக்குதத்தமானது உங்களுக்கும் உங்கள் பிள்ளைகளுக்கும் என்று பேதுரு அந்த பெந்தோகொஸ்தே நாளில் சொன்னார்.

அப் 2 : 39 – வாக்குதத்தமானது உங்களுக்கும், உங்கள் பிள்ளைகளுக்கும் நம்முடைய தேவனாகிய கர்த்தர் வரவழைக்கும் தூரத்திலுள்ள யாவருக்கும் உண்டாயிருக்கிறது என்று சொல்லி

## அன்றேய தினத்திலே 3,000 ஆத்மாக்களுக்கு ஞானஸ் நானம் கொடுக்கப்பட்டது. 3,000 மக்கள் அல்ல யார் அவர்கள் பதில் சொல்லும் வயது உடையவர்களே ?

எல்லோரும் அவரவர்களுடைய பாவத்திற்கு பொறுப்பு காரணம் காட்ட வேண்டியவர் என்ற எண்ணத்தை உருவாக்குகிறது. இயேசுவோ, சிறிய பிள்ளைகள், என்னிடத்தில் வருகிறதற்கு இடம் கொடுங்கள் அவர்களை தடை பண்ணாதிருங்கள்.

மத் 19:14 சிறிய குழந்தைகளை குறித்து ஆண்டவராகிய இயேசு கிறிஸ்து இந்த வார்த்தைகளை பயன்படுத்துகிறார். பரலோகராஜ்ஜியம் அப்படி பட்டவர்களுடையது என்று இங்கே நம்முடைய கடவுளாகிய கர்த்தர் குறிப்பிடுகிறார் இந்த ஒவ்வொரு சிறிய குழந்தைகளையும், சகல ஜாதிகளைச் சேர்ந்தவர்கள் என்று நாம் விசுவாசிக்கிறோம் அவர்கள் அனைவரும் பாவமுள்ளவர்கள் அவர்கள் கண்டிப்பாக மறுபடியும் பிறக்க வேண்டும் வல்லமையுள்ள தேவனுடைய வார்த்தையின் மூலம் அவர்களாலும் விசுவாசிக்க முடியும்.

சங் 51 : 5 இதோ நான் துர்க்குணத்தில் உருவானேன். என் தாய் என்னை பாவத்தில் கர்ப்பம் தரித்தாள்.

கர்ப்பத்திலிருந்து இரட்சிப்பு தேவைப்படுறது என்பதையே இந்த வேதாகப் பகுதி நமக்கு தெளிவாக் சொல்கிறது.

## எப்படி அவர்களை இரட்சிக்க முடியும் ?

கடவுள் நமக்கு ஞானஸ் நானம் என்னும் ஞானதிரவிய சாக்கிரமெந்துவை ஏற்படுத்தியிருக்கிறார். பிலிப்பு தேசத்திற்கு போன பவுலினுடைய இரண்டாம் பிரயாணத்தில் நாம் தெரிந்து கொள்வோம். ஜெயிலிலிருக்கும் அவனுடைய குடும்பம் முழுவதற்கும் பவுள் ஞானஸ் நானம் கொடுத்தான்.

அப் 16:33, மேலும் இராத்திரியில் அந்நேரத்தில் தானே அவன் அவர்களை அழைத்துக் கொண்டு போய் அவர்களுடைய காயங்களை கழுவினான். அவனும் அவனுடையவர்கள் அனைவரும் உடனே ஞானஸ் நானம் பெற்றார்கள்.

அப் 16:15 அவளும் அவள் வீட்டாரும் ஞானஸ் நானம் பெற்ற பின்பு அவள் எங்களை நோக்கி நீங்கள் என்னை கர்த்தரிடத்தில் விசுவாசமுள்ளவளென்று என்னினால் என் வீட்டிலே வந்து தங்கியிருங்கள் என்று எங்களை வருந்திக் கேட்டுக் கொண்டாள் லிதியாலும் அவள் குடும்பத்தாரும் பவுலினால் ஞானஸ் நானம் செய்விக்கப்பட்டார்கள். சிறிய குழந்தைகளை விலக்க வேண்டும் என்ற வார்த்தையானது சாதாரண அறிவுடைய முரண்பாடாயிருக்கிறது.

## எதில் ஞானஸ் நானம் வல்லமையுடையதாயிருக்கிறது ?

நாம் நம்முடைய குழ்நதைகளுக்கு லூத்தாரின் சிறிய கத்தோ கிஸ்முவை கற்று கொடுக்கிறோம். எப்படி தண்ணீர் இந்த மிகப் பெரிய காரியத்தை செய்ய முடியும் ?

உண்மையில் அதை தண்ணீர் செய்யாது ஆனால் அந்த கடவுளுடைய வார்த்தை தண்ணீரிலும், தண்ணீருக்குள்ளும் விசுவாசம் எந்த நம்பிக்கையை இது கடவுளுடைய வார்த்தை தண்ணீருக்குள் இந்த மிகப் பெரிய காரியத்தை செய்கிறது.

கடவுளுடைய வார்த்தை இல்லையென்றால் அது சாதாரணமான தண்ணீராயிருக்கிறது ஞானஸ் நானம் இல்லை ஆனால் தண்ணீர் கடவுளுடைய வார்த்தையுடன் கூடியதாயிருக்கும் போது அது பரிசுத்த ஞானஸ் நானம் அதாவது தமது இரக்கதின்படியே மறுஜென்ம முழுக்கினாலும் பரிசுத்த ஆவியினுடைய புதிதாக்குதலினாலும் அது ஞானஸ் நானமாயிருக்கிறது.

பவுல் தீத்து சபைக்கு எழுதும்போது ஞானஸ் நானத்தின் வல்லமையை விவரிக்கிறார். தீத்து 3:5 நாம் செய்த நீதியின் கிரியைகளினிமித்தம் அவர் நம்மை இரட்சியாமல் தமது இரக்கத்தின்படியே மறுஜென்மமுழுக்கினாலும் பரிசுத்த ஆவியினுடைய புதிதாக்குதலினாலும் நம்மை இரட்சித்தார். ஒருவன் ஜலத்தினாலும் ஆவியினாலும் (வார்த்தையானாலும்) மறுபடியும் பிறக்க வேண்டும் என்று நம்முடைய கடவுள் நத்தேதெமுகு சொன்னார். இது தான் தீத்து பராவில் சொல்லப்பட்ட மறு ஜென்மம்.

பேதுரு கூட விளக்கமாக ஞானஸ் நானத்தின் வல்லமையை சொல்லியிருக்கிறார்.

1. பேது 3 : 21 அதற்கு ஒப்பனையான ஞானஸ்நானமானது மாம்ச அழுக்கை நீக்குதலாயிராமல் தேவனை பற்றும் நலமனசாட்சி உடன்படிக்கையாய் இருந்து இப்பொழுது நம்மையும், இயேசுகிறிஸ்துவினுடைய உயிர் தெழுதலினால் இரட்சிக்கிறது?

தேவனுடைய வார்த்தையை பயன்படுத்துவதினால் ஞானஸ்நானம் வல்லமையுடையதாக இருக்கிறது இது ஒரு இரட்சிக்கும் வல்லமை.

ஆனால் இருதயத்திற்குள் ஒரு கிரியை பரிசுத்த ஆவனுடைய புதிதாக்குதல். கிறிஸ்துவில் நமக்கு ஞானஸ் நானமானது ஒரு வல்லமையுள்ள கட்டாயிருக்கிறது. ரேமம் 6:4 மேலும் பிதாவின் மகிமையினாலே கிறிஸ்து மரித்தோரிலிருந்து எழுப்பப்பட்டது போல நாமும் புதிதான ஜீவனுள்ளவர்களாக நடந்து கொள்ளும்படிக்கு அவருடைய மரணத்திற்குள்ளாக்கும் ஞானஸ் நானத்தினாலே கிறிஸ்துவுடனே கூட அடக்கம் பன்னபட்டோம்.

## என்ன [அ] எந்த முறையில் [அ] வழியில் ஞானஸ் நானம் கொடுக்கப்பட வேண்டும் ?

மத் 28 ஆம் அதிகாரத்தில் நாம் வெளிப்படையாக பார்க்கிறோம். ஞானஸ் நானமானது கண்டிப்பாக திரித்துவ நாமத்தில் கொடுக்கப்பட வேண்டும்.

இயேசு கிறிஸ்துவுக்குள் ஞானஸ் நானம் கொடுத்தல் என்றால் அதனுடைய உண்மையான அர்த்தம் கட்டளையிடப்படி திரித்துவ தேவனுடைய நாமத்தில் கொடுத்தல் என்பதாகும் - சிறிய குழந்தைகளுக்கு ஞானஸ் நானம் கொடுப்பதில் புராட்டாஸ்ட்டென்ட்களுக்கு இடையே அவர்களுக்குள் சரியான கருத்து வேறுபாடுள்ளது - அதனால் அங்கே ஞானஸ் நானம் கொடுக்கும் முறையிலும் கருத்து வேறுபாடு இருக்கிறது.

இது இரண்டு சங்கதிகளிலும், நிலைகளிலும் பிரச்சினை உருவாகின்றது. ஏனென்றால் சிலர் சரியான சாதாரணமாக வேதாமத்தின் படிப்பாளிகளல்ல அதற்கு பதிலாக அவர்கள் மனித காரண விதிகளை தேர்ந்தெடுத்து பின்பற்றியிருக்கிறார்கள்.

கடவுள் தண்ணீர் எப்படி பிரயோகிக்கப்பட வேண்டும் என்று குறிப்பிடவில்லை. தண்ணீர் கண்டிப்பாக பயன்படுத்தப்பட வேண்டும் என்று அவர் நமக்கு கட்டளையிட்டள்ளார். அங்கே அவ்விடத்தில் பொதுவாக வெவ்வேறு வகையான மூன்று முறைகள் தண்ணீருடன் ஞானஸ் நானம் கொடுப்பதில் கிறிஸ்துவர்களுக்கு இருக்கின்றன.

1. தெளித்தல் 2. ஊற்றுதல் 3. முழுகுதல் (அ) முக்குதல்

நீங்கள் கண்டிப்பாக தண்ணீருக்குள் மூழ்க வேண்டும் என்று அல்லது நீங்கள் அப்படி செய்யவில்லை என்றால் உண்மையான ஞானஸ் நானம் பெறவில்லை என்று சொல்கிறார்கள் ஆழ்ந்து யோசிக்காமல் அவர்கள் தவறு செய்கிறார்கள்.

அந்த வார்த்தை பேப்டோ என்று இருந்தால் முழுகு, முக்கு (அடக்கம் செய்) என்பதற்கு மிகச் சரியாக இருக்கும். ஆனால் அந்த வார்த்தை பேப்டோ என்று இல்லை,. ஆனால் கழுவுதல் என்ற உள்ளது. இது புதிய ஏற்பாட்டில் பயன்படுத்தியுள்ள கழுவுதல் என்பதின் அர்தம் கழுவுதல் தண்ணீரை பிரயோகி என்பதாகும் யூதமார்க்கத்தர் தங்கள் மத ஆசாரமான முறைப்படி பயன்படுத்துகின்ற கழுவுதல் என்பதின் அர்தமாகும்.

மாற்கு 7:2-5 அப்பொழுது அவருடைய சீஷரில் சிலர் கழுவாத அசுத்த கைகளாலே போஜனம் பண்ணுகிறதை அவர்கள் கண்டும் குற்றம் பிடித்தார்கள்.

ஏனெனில் பரிசேயர் முதலிய யூதர்கள் அனைவரும் முன்னோர்களின் பாரம்பரியத்தை கைக் கொண்டு அடிக்கடி கை கழுவினாலொழிய சாப்பிட மாட்டார்கள்.

கடையிலிருந்து வரும் பொழுது ஸ்நானம் பண்ணாமல் சாப்பிட மாட்டாக்ள். அப்படியே செம்புகளையும், கிண்ணங்களையும், செப்புக்குடங்களையும், மனைகளையும் கழுவுகிறது மல்லாமல் வேறு அனேக ஆசாரங்களையும் கைககொண்டு வருவார்கள் அப்பொழுது அந்த பரிசேயரும் வேதபாரகரும் அவரை நோக்கி உம்முடைய சீஷர்கள் முன்னோர்களின் பாரம்பரியத்தை மீறி ஏன் கை கழுவாமல் சாப்பிடகிறார்கள் என்று கேட்டார்கள்.

லூக் 11:38 அவர் போஜனம் பண்ணுகிறதற்கு கை கழுவாமலிருந்ததை பரிசெயர் கண்டு ஆச்சர்யப்பட்டனர்.

ஏபி 9:10 இவைகள் சீர்திருத்தல்கள் உண்டாகும் காலம் வரைக்கும் நடந்தேறும்படி கட்டளையிடப்பட்ட போஜனபானங்களும், பலவித ஸ்நானங்களும் சரீரத்திற்கேற்ற சடங்களுமேயல்லாமல் வேறல்ல.

மேற்கண்ட வசனங்களில் கழுவுதல் என்ற வார்த்தை பயன்படுத்தப்பட்டுள்ளது. பெந்துதோகொஸ்தே நாளில் பரிசுத்த ஆவியின் ஞானஸ் நானத்தை நாம் நினைத்து பார்க்கும்போது பரிசுத்த ஆவியானவர் அவர்கள் மேல் ஊற்றப்பட்டார்.

மத் 3:11 அப் 2:16-17. பல வழிகளில் தண்ணீரை பயன்படுத்துவதற்கு வேதகாமம் நம்மை அனுமதிக்கிறது.

வேதகாமம் போதிக்கிற எல்லாவற்றையும் நாம் போதிக்கின்றோம். எதையும் வேதகாம வார்த்தையுடன் நாம் கூட்டுவதோ, அல்லது வேதாகம வார்த்தைகளிலிருந்து எதையும் குறைப்பதோ, எடுத்துப்போடுவதோ இல்லை. எப்படி அந்த பிராயசித்த நாளிலே, சமாதனப்படுத்தின நாளிலே, பரிசுத்தத்திலும் பரிசுத்தமாய் அவருடைய இரத்தம் தெளிக்கப்பட்டு (சிந்தப்பட்டு) நம்முடைய பாவங்கள் எல்லாவற்றையும் தூய்மையாக்கியது என்பதே உதரானமாக தெளித்தல் மூலம் ஞானஸ் நானம் கொடுக்கும் முறையை குறித்த சிறந்த ஞாபக நினைவுகளை கொண்டு வருகிறது.

கீழ் கண்ட பராவில் எபிரேயருக்கு எழுதின நிருபத்தில் நிருபத்தை ஆக்கியோன் உருவகப்படுத்தி பயன்படுத்துகிறார்.

துர் மனசாட்சி நீங்கத் தெளிக்கப்பட்ட இருதயமுள்ளவர்களாகவும் உண்மையுள்ள இருதயத்தோடும், விசுவாசத்தின் பூரண நிச்சயத்தோடும் சேரக்கடவோம். எபி 10:22.

ஏசேக்கியல் தீர்க்கதாசியும் கூட இதையேதான் ஞானஸ் நானத்தை குறிப்பிடும்போது பிரயாசித்தத்திலிருந்து உருவகப்படுத்தி பயன்படுத்துகிறார்.

எசோக் 36 : 25-26 அப்போது நான் உங்கள் மேல் சுத்தமான ஜலம் தெளிப்பேன். நான் உங்களுடைய எல்லா அசுத்தங்களையும் உங்கள் எல்லா நரகலான விக்கிரங்களையும் நீக்கி உங்களை சுத்தமாக்குவேன் நீங்கள் சுத்தமாவீர்கள்.

உங்களுக்கு நலமான இருதயத்தை கொடுத்து உங்கள் உள்ளத்திலே புதிதானா ஆவியை கட்டளையிட்டு கல்லான இருதயத்தை உங்கள் மாம்சத்திலிருந்து நீக்கிப் போட்டு சதையான இருதயத்தை உங்களுக்கு கொடுப்பேன்.

## ஊற்றுதல் தண்ணீருடன் ஞானஸ் நானம் கொடுக்கும் மற்றொரு முறையாகும்.

பல வழிகளில் தண்ணீரை பயன்படுத்துவதற்கு வேதாகமம் நம்மை அனுமதிக்கிறது. வேதாகமம் போதிக்கிற எல்லாவற்றையும் நாம் போதிக்கிறோம். எதையும் வேதாகம வார்த்தையுடன் நாம் கூட்டுவதோ அல்லது வேதாகம வார்த்தையிலிருந்து எதையும் குறைப்பதோ எடுத்துப் போடுவதோ இல்லை.

பெந்தோ கொஸ்தே நாளில் எப்பொழுது பரிசுத்த ஆவியானவர் சீஷர்கள் மேல் ஊற்றப்பட்டார் என்பதை நினைவுபடுத்துகிறது. பரிசுத்த ஆவியுடன் தண்ணீருடன் வார்த்தையும் வந்தது.

ரேமம் 5:5 மேலும் நமக்கு அருளப்பட்ட பரிசுத்த ஆவியினாலே தேவ அன்பு நம்முடைய இருதயங்களில் ஊற்றப்பட்டிருக்கிற படியால் அந்த நம்பிக்கை நம்மை வெட்கப்படுத்தாது.

முழுகுதல் கூட ஞானஸ் நானம் கொடுப்பதில் மற்றொரு முறையாகும். ஆயினும் நாம் நம்முடைய லூத்தரின் சிறிய கத்தோ கிஷ்முவில் இதை விளக்க பயன்படுத்துகிறோம்.

## தண்ணீருடன் ஞானஸ் நானம் என்ன குறிப்பு எது ?

இது என்ன குறிப்பை அறிவுறுத்துகிறது என்றால் நமக்குள் இருக்கிற பழைய ஆதாம் தினந்தோறும் பச்சாதாபப்பட்டு மனந்திரும்பி அடக்கம் செய்யப்பட்ட பழைய ஆதாம் அவனுடைய எல்லா பாவத்திற்கும், தகாத இச்சைக்கும், மானசீக கிரியைகளுக்கும் மரித்து மறுபடியும் தினந்தோறும் புதிய ஆதாமும், புதிய ஆதாமுக்குறிய செய்கையுடன் எழுந்து தேவனுக்கு முன்பாக நீதியுடனும், பரிசுத்தத்துடனும் எப்போதும் வாழவேண்டும்.

ஞானஸ் நானம் கொடுப்பதில் கட்டாயப்படுத்துகிற (நிர்பந்தத்திக்கிற) முறை எதுவும் முக்கியமல்ல ஞானஸ் நானமானது இன்றியமையாத உண்மையானதாக இருக்க வேண்டும்.

மாற்கு 16::16 விசுவாசமுள்ளவனாகி ஞானஸ்நானம் பெற்றவன் இரட்சிக்கப்படுவான், விசுவாசியாதவனோ ஆக்கினைக்குள்ளாகத் தீர்க்கப்படுவான்.

## தீர்மானம்

ஞானஸ் நானமானது ஆண்டவர் அவரது சகலவித வல்லமையுள்ள வார்த்தையின் மூலம் இருதயத்திற்குள் நிலைத்த விசுவாசத்தை உருவாக்குகின்ற கிரியை இதன் மூலம் செய்கிறார். மறுஜென்ம முழக்கினால் கொடுக்கப்பட்ட பாவமன்னிப்பின் நிச்சயத்தை நாம் தொடர்ந்து அவருடைய வார்த்தையில் நிலைத்திராவிட்டால் இழந்து போவோம்.

ஞானஸ் நானம் நாம் தொடர்ந்து கடவுளுடைய வார்த்தையில் நிலைத்திராவிட்டால் பாலைவனத்தில் பயிரிடப்பட்ட செடிமைப் போல் இருக்கும்.

நீ அந்தச் செடிக்கு தண்ணீர் ஊற்றவில்லையெனில் அது மரித்து போகும், அழிந்து போகும் அது நமக்குள் வேர்விட்டு வளரும்படியாக அந்த தண்ணீராயிருக்கிற தேவனுடைய வார்த்தையில் நாம் கண்டிபாபாக தொடாந்து நிலைத்திருக்க வேண்டும்.

யோவா 4::14 நான் கொடுக்கும் தண்ணீரை குடிக்கிறவனுக்கோ ஒருக்காலும் தாகமுண்டாகாது நான் அவனுக்கு கொடுக்கும் தண்ணீர் அவனுக்குள்ளே நித்திய ஜீவகாலமாய் ஊறுகிற நீரூற்றாயிருக்கும் என்றார் ஆமென்.